


உ
சிவமயம்.

மீனாட்சியம்மன் விருத்தம்.

காப்பு.

அன்புமிகுந்தோங்குமீ னாட்க்ஷியம்மைகீர்த்தனமிங்
இன்பமுடனோத வெழிலான பொன்பரப்பி
பூசலாநகரில்மேவு மாரிமுத்தாச்சாரி மெய்முயர்ச்சியன்றோ
பூவிலிதையச்சியற்றும் பொன்னடியே காப்பு.

பூமாவத்தை ப. பூ. சண்முகம் செட்டியார்பேரில்பாடிய

வெண்பா.

துன்பமதை ஓட்டும் துரைசண்முகம் செட்டியார்
இன்பமுறு கீர்த்தனையை யியம்பக்கேட்-டன்பாக
இன்பமிகப்பெருகி இதங்கியொரு பொன்னளித்தார்
அன்பர்புகழ் சண்முகம் செட்டியார்.

இதுவுமது.

மதுரைநகர் மீதாடும் மீனாட்க்ஷி யம்மன்பேரில்
இச்சையுடன் பாடல்தன்னை இயன்பக்கேட் - டச்சிடேட

தங்கமெனுநாகல தர்மசண்முகம் செட்டியார்
மிக்கபொரு வியற்றிட்டார் மாரிமுத் தாச்சாரிக்கு.

இ து வு ம து.

ஆனைங்க பேடி அரிய மதுரையினில்
வாரணியுங் கொங்கை அறமிநல்ல மீனாட்சி—பூரணிமேற்
செந்தமிழின் மனவிருத்தஞ் செப்பிடவே நல்லவருட்
டொந்தி வயிற்றோன் துணை.

வி ரு த் த ம்.

திக்குவிசை கொண்டாடும் மதுரைமீனாட்சியுன் திருவடிகள் மறவாதநான், திரமுளபாவாணர்க் கடிமையாகியசெயல் விஸ்வகுல தீரனும், சொக்க நாகேந்திரன் அருள்பெற்ற சுந்தர ஜெயமாரி முத்தன்புகொண்டு, தமிழ்த்தோத்திர மாகவெகு மனுவாகவேமொழி சொல்லுமது தமிழ்மாலையும், மிக்கவெகு ஏவிளம்பி வருஷம் மகரமாதம் சப்தமிவிளங்கு பதினைந்தாந்தேதியும், மிகுந்திடும் மந்தவாரம் சுபதினமும் விளங்கிடும், அந்தநாளில் இரவுமணி பத்தரையில் பிரசன்னமானதுபோல் என்னுளு மதுபோலவே பிரஜன்னமாக வேண்டுமம்மா, என்றனுடைய உடம்பினில் வியாதிவந்தணுகியும் உனைநினைந்திடவே பஞ்சுபோற் பரக்குதம்மா, மாரிமுத்தாச்சாரி சித்தமதில்குடிகொண்ட மதுரைமீனாட்சியுமையே சுந்தரகல்யாணியுமையே. (1)

ஆதிநீ அந்திநீ ஆனந்தரூபிநீ அகிலாண்டமீனாட்சியும்நீ, அருவி நீகுருவிநீ நருபிநீ கருவும்நீ அறம்வளர்த்தாண்டவளும்நீயே, அன்னையும்நீதாநிர்க்க ஆதாரமானதும்நீ அல்லாது வேறில்லையே, அஞ்சலம்உனதடிமை செந்தமிழ்க் குநவிபுரி அன்பாளசவுந்தரியும்நீயே, நீதிவளர்கோட்டை கொத்தளமேடை கோவிக்கல் நித்தியசிவ பூசையுடனே, நேமித்யகற்பூர தூபங்களும்பெருக நேமித்ய அலங்காரமும், நீலவிழி பார்வையும் சேர்வையும் நிர்ப்பிரம்புமணியும், ரத்னசிம்மாசனக்கொலுவதிலிருக்கின்ற நிலமையிது சொல்லவெளிதோ, வேதாளபூதங்கள் பாவாடைகொண்டழகி வெண்கவுரி தான்வீசவே, வீசுபுகழ்கட்டியம் தாமெனுலிமுழக்கவே மெல்லியர் குலவை இடவே, மெய்ப்பான மதுரைநகர் தன்னிலே வெற்றிமொழிகூறிவரவே, சோதிமயம் உன்சமுகம் இதயேழை உலகங்களைத் தொண்டலாய் நின்றமயமே, சுந்தரசிதம்பர நடம்புரி சூட்சமா தங்கிகௌரி, சொர்ணமயம் மதுரைநகர்மீனாட்சித்தம்மையே சுந்தரகல்யாணியுமையே. (2)

பூமேவுமளகமும் திலகமிடுநுதலும் புனைந்தபொற்குழையிணைமுகு ம், புனிதமுருபாசிகாபரணமும்புன்னகை யொளிந்தசெம்பவழவாயும் தூமேவுமுத்தமணி வச்சிரப்பதக்கமும் துலங்குபட்டாடையும், சுடர் விடுசிலம்பிடொடு தண்டைகளிசைந்திடும் துய்யமலரடியிணைகளும், மாமேவு மரகதம் போலொளிருமேனியும் மழுமபயவரதகரமும், வள ரருள்பார்வையும் கொண்டடியேனுனது வடிவினைக் காணவருவாய், மாமேவுபூவளர் நெருங்குதெங்கம் பொழில்கள் மதுரை யமர்ந்தென் சித்தமிசை குடிகொண்ட மதுரைமீனாட்சியே சுந்தரகல்யாணிவுமையே.

உருமருவுகோடியண்டங்களுக்கன்னையே யோதுநாதாந்தசத்தி, ஓங்குநிரியம்பதி சுமங்கலைசுந்தரி யுத்தமிசிவசங்கரி, அருமருவுபுங்கவி மகாசிதாயகி அம்மைமீனாட்சிவுமையே, ஆனந்தமெல்லியே பிரவண சுரூபியே யாயிமகமாயிவுமையே, கருமேகுமில்வுலக வாழ்க்கையா தன ாிலே கட்டுண்டுநாட்களித்தேன், கள்ளயமபடர்கள் வருவாறென்ன செய்குவேன் கடையாளன் மனதின்வண்ணம், திருவருட்போகவொளி காட்டி எனையாளுவாய் நிகழ்மதுரை யமர்ந்தென சித்தமிசை குடி கொண்ட மதுராமீனாட்சியே சுந்தரகல்யாணி வுமையே. (4)

இப்பிறவி கொள்ளுமுன் னென்னபாவங்க ளீட்டினேன் மேலு மேலும் இருவினைஎனுந் திறையிடுற்றுண்டு வெய்தியே யுழன்றலுந் தேன், செப்பிளங்கொங்கை மடமாதர்மால்வலயிலே சிக்குண்டுநெஞ்சு ழிந்தேன், தேகமேதிடமில்லை ஞானமோ கனவிலும் சிந்திலேன் பாவி யானேன், ஒப்புயர்விலுன்னருளை யோதவறியேனுனு முச்சரித்திடவு மறியேன், ஒன்றுமலபரிபாகபக்குவம்வந்துய்ய வுள்ளத்திலன்புமில்லை, செப்பரியமுத்தியாங் கறைசேருவாய்நிகழ் மதுரையமர்ந்தென சித் தமிசை குடிகொண்ட மதுரை மீனாக்ஷியே நித்தியகல்யாணிவுமையே.

என்சொல்லைக் கேட்டுநீ நெஞ்சிறக்கம் வையடி நித்தியகல்யாணி வுமையே, நித்தம் ஒருதினம் பிரசன்னமாகவே அந்தியும் பகலுமுன தருளைடகலாமலும் சத்தியம்புகலாமலும், அதிதிகட் கன்னமில்லை என் று சொல்லாமலு மறத்தினைக் கொல்லாமலும், வெந்துயரினு லுடல் மெலியாமலும்கொடிய மிடிவந்துலியாமலும் வில்மாதர்ம்ம லன்பு செல்லாமலுஞ் சபையில் வீண்பேசி வெல்லாமலும் புத்தியை மயக் கியே புறநெறியிலுய்த்திடும் புல்லருறவுகூடாமலும், புகலுமுனையன்றி வேறொரு தெய்வமுண்டோ பொருமிமிக வாடாமலுஞ் சிந்தையுனை மறவாமலும் வரந்தருவாய், நிகழ்மதுரை யமர்ந்தென் சித்தமிசை குடிகொண்ட மதுரைமீனாக்ஷியே சுந்தரகல்யாணிவுமையே. (6)

எந்நாளுமுன்னடைக் கலமானேனென்றுநா னுன்செவிக் குறை க்க இதுவேனா எனவிடத்தில் இருப்பது விருந்தா வெனமறுவாய

தேதுனக்குச் சிந்தயினினைத்தே யுன்பதந்தனைச் சிக்கெனப் பிடித்து
காணிருக்கத் தேடவிட்டிருந்தா லுனைவிடுவனோ செப்பு நீயெனக்கொ
ருவார்த்தை யைந்தமிழோத நாவினிற் பஞ்சாக்ஷரந் தாயே பகர்ந்திடு
மெனக்குப் பத்தியா லுன்னை யர்ச்சனை புரிந்து பணிந்திடப்புத்திபோ
தாது வரந்தந்தெனை ஆளுவாய் திகழ் மதுரையமர்ந்தென் சித்தமிசை
குடிகொண்ட மதுரைமீனாட்சியே சிவசத்தியானவுமையே. (7)

எந்தனைப் போலவே ஜென்மமெடுத்தோர்கள் இன்பமாய் வாழ்ந்
திருக்க, யான்செய்தபாவமோ இந்தனை வருமையி லுன்னடியேன்தவி
ப்பதம்மா உன்னையேதுணையென்று உறுதியாய்நம்பினே னுன்பாதஞ்சா
க்ஷியாக, உனையன்றிவேறுதுணை இனி யாரையுங் காணேன் உலகு
தனி லுந்தனக்கு, எடுபிள்ளை என்றென்னைநீ சொல்லாம லென்வரு
மை போக்கடித்தென்னை ரட்சி, பூலோக மெச்சவே பாலன்மார்க்கண்
டன்போல் பிரியமாய்க் காத்திடம்மா, அன்னையே உன்னடியேனை ரட்
சிக்க அட்டிசெய்யாதே யம்மா, வாரணியும் மார்பினில் சரப்பளிபத
க்கமும் சிறுநுகு காதினில் கம்மலும் வர்ணநிறக் கிளியுமினொடு
கொப்பும் ரத்ன மூக்குத்தியும் சிறந்த பட்டாடை யழகும் சிறுகண்
ணின் பார்வையழகும், சிற்புகழ்மேனியும் மாகதப்பட்சியும் சிறந்த
நல்லப் பல்லினொளிவும் சொல்லவெளிதோ, திகழ் மதுரைதனில் மறி
ந்தென் சித்தமிசை குடிகொண்ட மதுரைமீனாக்ஷியே நித்திய கல்
யாணிவுமையே. (8)

ஓயாத கவலையும் தீருதவருமையும் மொழியாத வன்பிணிகளும்
உலகெலாம் பகைகளும் மனவிலாகன்மமும்ஒருவரால் சொல்லவசமோ
பேயாகாளித பிடையிற்சிக்கியே பூமிதனில்பெண்களெனு மாய்கை
யா லங்கமதுவாடியே பிரம்மையால்மெய்தளர்ந்தேன், அத்திமுகனைப்
பெற்ற நித்தியகல்யாணியே யமரர்தொழும் சர்வாணியே, அறியாத
சிறுவன்மேலினியாகி லுளமகிழ்ந் தன்புவைத்தருள் புரிகுவாய், நான்
மனிதனுருவாகி பூமியிற்ஜன்மித்து நலமான செல்வமறியேன், கடல்
சூழு மிவ்வுலகி லென்போலுமுடனைக் கண்டதுண்டோ மீனாக்ஷியே,
யுந்தனிட பாதமதைநம்பினேன் கன்மவினையணுகாமலே கண்ணிருள்
நாடாமலே காயமிகவாடாமல் கைகால்கள் நோகாமலே காலனுக் கஞ்
சாமல் கலியெனு மிஞ்சாமலாரா லும்சினம்வாராமலே பட்சமாயிரட்சி
யம்மா, ஆண்டநீ இப்போதுகோபித்தாவிட்டின் ஐயகோவெங்குச்செல்
வேன் ஏதேதுரைத்தாலும் கினைசெவியிலேற்றும லெனைமெள்ள நெகி
ழவிட்டாய் ஏதொன்றுமறியாத மூடமகமாயினு மீன்றுள் கைவிடுவ
துண்டோ, தாய்மறந் தனதருட் பேருபெற்றறிலேன், திகழ்மதுரை
யமர்ந்தென் சித்தமிசை குடிகொண்ட மதுரை மீனாட்சியே சிர்ச்சத்
தியானவுமையே. (9)

பாடலபினையகீந் தேவதாசிகள் வந்து பரதநடனம்புரிவதும், பதி னெட்டுவாத்திய முழக்கமும் பனிரண்டு திருவிழாவும் ஆடலருப த்துநான்கு புரிதிரிகூடலாம், சாம்பூனதட்சபைதன்னில் ஓலைநவமணி விசிறி புல்லாக்கு முருகு பட்டாங்காரை மங்கிலியமும் சிமிக்கிஒட்டி யாணம் மெட்டு பாதச்சிலம்பி னொளியும் புயர்கங்கணமும் மோதிர மும் நிறைவுடன் பிரசன்னமாய், கொங்கையினிற் றித்திப்பதான பா லமுதங்கொடுத்த பாம்பதிசத்தி மாதங்கி கௌரி பரமசிவசொக்கநாத க்கடவுள் பக்க மமர்ந்திருக்கும் மம்மணி, செல்வப்பொருள்களைத் தே டாமல் வீணாட்செலுத்தினே னிதுவரையினில், சல்லியஞ்சச்சரவு சத் ருதிகள் வந்தணுகாமலும் தற்காத்துரக்ஷித்தருள்வாய், எந்தனிடநாவி னில் நின்று நடனம் புரியும் மாதாவேயுனை நம்பினேன் சித்தங்கலங் கியேமெத்தவும் மயங்கியே வெம்பினேன் சற்றேனுமனமிறங்காத தென் னமோ அன்புவைத் தருள்புரிகுவாய், சித்தமதில் குடிகொண்ட மது ரைமீனாட்சியே சிர்ச்சத்தியானவுமையே. (10)

போற்றிஎன்சென்னியில்வைக்கும் பொருவில்சேவடிகள்போற்றி, போற்றிஎன்சிந்தை மையல் போக்குசிறடிகள்போற்றி, போற்றி என் மதுரைக்கோயில் போந்தபொற் கனல்கள் போற்றி போற்றி, போற்றி என்னுளமொழிக்கும் போதமன மடிகள்போற்றி, போற்றிஎன்னுணர் வதாக்கும் பூங்கனல் போற்றிபோற்றி, போற்றியே குறைவிலாத பொ ன்னருள் மாரிமுத்தாசாரி போற்றிபோற்றி, போற்றெருணு கிஷ்ணம் மாள் போற்றிபோற்றி, சாற்றெருணுமதுரை மீனாட்சி சராசரமெல்லாம் போற்றிபோற்றி, போற்றுநாதாந்தப் பொருள்எல்லாம் போற்றி போ ற்றி, திருவடிகளைசரணம். (11)

பொன்னெனனன் முகில்கண் மழைபொழியும் பூசலானை கரும் வாழி, புவியின்மேவும் ஜெனங்களும் பொலிந்துவாழி, மன்னன்மாரி முத்தாசாரி மனமகிழ்ந்து வாழிவாழி, மனையாட்டி கிஷ்ணம்மாள் மன மகிழ்ந்துவாழி, மகிபமீனாட்சிமகளிற் பதிவிரதமணி மீனாட்சி வாழி வாழி, துன்னுமறையாகம வேதியர்கள் வாழி, சுத்தமுருகுசைவநெறி யன்பர்வாழி, மன்னன் சண்முகம்செட்டியாற் மதிமுகம் வாழிவாழி, மதுரைநகரோர் வாழிவாழி, மீனாட்சியம்மையருளோங்கி வாழிவாழி.

கலி விருத்தம்.

ஓதும்முடலும் முலகும் முளதாய்
ஏதும் மறியேனுதல்வே எனையாள்
டதேஇவனே இவனென்றருளும்
மாதேவடிவே மதுரைமீனாட்சியே.

மீனாட்சியம்மன் விருத்தம்

முற்றிற்று.



உ

சிவமயம்.

மீனாட்சியம்மன் கீர்த்தனை.

காப்பு.

மீனாட்சிகவிக்கு மூர்த்திவிநாயகரே வந்தருள்செய்
நான்முகன்றன் சரஸ்பதியே-எந்தன் நாவில்வந்து நிர்த்தனம்செய்.

வெண்பா.

ஆத்திமலர்ச் சூடுகின்ற அம்பலவர் தன்சுதனே
போற்றி மிகத்தொழுது புகழுடனேயான்—மீனாட்சியைப்பாட
நாற்றிசையும் கொண்டாடும் நற்றமிழால் பாடுதற்கு
காத்தெனக்கு முன்னடவாய் கணபதிநீ காப்பு.

கீர்த்தனம்.

பல்லவி.

காட்சிதந்தென்னைக் காருமம்மா-மகா
மதுரைநகரில் கொலு வீற்றிருக்கும் தாயே (காட்சி)

அநுபல்லவி.

மாட்சிமைபொருந்திய என்னாட்சிஎன்றுன்னைநம்பினேன்
பூமாவதைநாட்டிலுன்னை போற்றிநிற்கும் நல்ல மீனாட்சித்தாயே. ()

சரணம்.

உன்னைஜெயிக்க ஒருயுக்தியும் இல்லை நாளு
வேதசாஸ்திரங்கள் நான் கற்றதும் இல்லை சிவ
சற்குருக்களைத்தேடிப் பணிந்தது இல்லை சிவ
மீனாட்சிபாதம் பூஜைசெய்யவே கொள்ளை (காட்சி)

மாயையானமாதாவே நீ எனையாளு மனமகிழ்ந்துநான் சொல்லுகு
றேன்கேளு மண்டலமுழுதையும் மகிழ்ந்துநீ யாளு தெய்வ
பக்தி இல்லாதபேர்களைக் கைக்கொள்ளு அந்த
திக்கான துன்மார்க்க ரண்டையி லிருக்கத்தள்ளு (காட்சி)

பாட்டும்விருத்தமும் நல்லபதங்களும் சங்கீதமும் கூட்டியே
கவிக்கொடியேநாட்டியே எதிரியைவாட்டி ஓட்டி விட்டு
உலகத்தில் ஒருவர்க்கும் அஞ்சாமல் நாஸ்டகமாய்ப்
பெயரெடுத்துத் தரணியில் வாழ்ந்திருக்க (காட்சி)

தென்மதுரா புரியில்வளர் தேவிபரிமளவேணி வன்மை
வைப்பதுகாறு மாதவர்போற்றும் கல்யாணி உற்ற
துணைமுற்றுமென உனைநம்பினேன் நாதா கற்றவர்
மற்றவர்துதிகாரணிஓம் ஸ்திரீதரிநீ பக்தியாய்
மாரிமுத்தய்யன் போற்றும் பாண்டிய ராஜகுமாரீ
சத்யமனோகரி சுகுணாவாரி (காட்சி)

உன்னருளிருந்தா லெனக்கொருவரும் நிகரில்லை என்
றெண்ணியே கவிராஜ சிங்கமென்று பேரெடுத் தேன்
என்மேல்வன்மை வைத்திருப்பதுதகாது மாதவர்போற்றும் கல்யாணி
எந்தக்கவிசொன்னாலும் சுந்தரமாயிருக்கக் (காட்சி)

உன்னிதுடமை பொன்னாய் உலகமெங்கினும் மின்ன
பாலவடிவாய்ப் பார்க்களந்தன் கண்ணால் முன்
ஆசைப்பிசாசையோட்ட அகந்தையழித்து வாட்ட
பக்திபலத்தையூட்ட பாததரிசனங் காட்ட
அஞ்சாதென்றுரைக்க அபயவரங் கொடுக்க
கிஷ்ணம்மாள்பூரிக்க மின்னோநின்று அழைக்க (காட்சி)

சொர்ப்பனந்தன்னிலே நீவந்தாய் நாசொப்பாதென் றென்னாதே
எந்தன்சொல்லைக் கல்லின்மேல் எழுத்தாக எண்ணி
யொருகபடமும்பண்ணாதேசெயுன் பொருள்
சிரிதென்றெண்ணிசேராமல் இருக்காதே செல்ல
மீனாட்சிபிரியேயுனக்கு இன்ன மிரங்காதென்ன (காட்சி)

வேறு கீர்த்தனம்.

பல்லவி.

மீனுஉனை நம்பினேன் நானும்மனம் வெம்பினேன்

அநுபல்லவி.

தவவடிவாக்குமனஸ்த் தாபங்களைநீக்கு எந்தனிட
வாக்குக்கிரங்கியே நேருக்கு (மீனுஉனை)

ஒருநாளுந்தம்பிரியாத உலகேசருடன் கூடி.
ஜகந்நாதனைநாடி எனையாடியே யிருக்கிற இடந்தேடி.
இந்திராவிமானத்தின் மேலேறி (மீனுஉனை)

அன்னைதந்தையனேக பந்துப்பிரியர்களும் நீயே
கருணாநிதிநீ கதியென் றுனையடுத்தேன் அல்லும்பகலும்
மீனாட்சிப்பிரியா ளுந்தனைபண்டி அழைக்க
வராமலிருக்கிறாயே (மீனுஉனை)

பாண்டியராஜகுமாரி வேண்டிவந்தோர்க்குபகாரி
தீண்டினேனுன் நாமங்கள்கூறி
என்டிஎந்தனை வாரி
உன்னிருகையால் அணைத்து என்னிருவினையைத்தீர்த்து மேலானபத
த்திற்சேர்த்து தாசன்மாரிமுத்தைக் காப்பாற்று. (மீனாட்சி)

இவ்வபரிட்சணத்தின் மேல்வந்தும்
தேவாதிதேவாஉன் பாததரிசனந்தந்து
குங்குமசுந்தரி எந்தனைமந்தரி
மறைபிகழும்மாயை மறக்குதடிதாயே
மீனாட்சிப்பிரியே முன்னேகாருநீயே (மீனாட்சி)

வேறு மெட்டு.

பல்லவி.

ஏன் என்னைமிரட்டுகிறா யம்மணி—நீ
எத்தினைவிதம்சொன்னாலும் சித்திவித்தையானறிவேன் (ஏன்)

அநுபல்லவி.

தேன்மொழியும்தென்மறை நேவற்சோமச்சுந்தரரோடு
சேர்ந்துவிளையாடும்ஞானச் செல்வவடிவே (ஏன்)

சரணம்.

அரும் அறியாமலே அர்த்தராத்திரிவேளைதனிலே இங்கே நீ
திவ்யவானவற்பதிக்கு முத்துவாரமகுந்தயா மீனாட்சியே (ஏன்)

காணிக்கைப்பணங்கள்தோறும் காப்பும்களவெடுத்த
கண்குறும்பிபோல்விழிக்கும் கள்ளவேடத்தி—இவ்ய
மாணிக்கப்பதக்கமுத்து மாலையைக்கொடுக்காவிட்டால்
மாப்பிள்ளைசொக்கேசருடன் மண்சுமக்கவாவெழியே (ஏன்)

பேர்பெருகும்பாண்டியற்குப் பெண்ணரசியாகவந்த
பேயனுக்கேயிந்தப் பேர்தரித்தானோ
ஆர்குடியைநீகெடுத் தலயவிட்டசித்ராங்கி
ஆளசாபத்தாலேஇந்த ஆண்டிக்கியாலைஇட்டாய் (ஏன்)

ஆண்டவனென்றாலும் அதற்குநான்அஞ்சுவனோ
உனைப்பெற்றஅப்பனும் ஆத்தாளும் அடங்கலும்கூட்டிவந்து
தாண்டிக்குட்டிக்கரணம் போட்டுகாளிதனைக்கெஞ்சினாலும்
தாழினைவிடாதமாரிமுத்தாசாரிக் கருள்புரிகுவாய் (ஏன்)

ம ங் க ள ம்.

மங்களம் நித்ய சுபமங்களம் மங்களம் மங்களம்
ஸ்ரீ மீனாட்சிசுந்த ரேசற்கும் சுபமங்களம் மங்களம்
மங்களகுணாளனுக்கும் மந்திரிவிசாலனுக்கும் மங்களம்
கங்கையருள்பாலனுக்கும் கானவள்ளிலோலனுக்கும் மங்களம்
மரகதமயூரனுக்கும் மாமறைவிஸ்தாரனுக்கும் மங்களம்
ஏரற்றுதிகுமாரனுக்கும் சுந்தரமீனாட்சிக்கும் மங்களம்
சத்திவடிவேலனுக்கும் சண்முகசீலனுக்கும் மங்களம்
தீரசூரகாலனுக்கும் திகள்மாரிமுத்தாசாரிக்கும் மங்களம்
மோனஞானபோதனுக்கும் சுந்தரவிலாசருக்கும் மங்களம்
சித்திகருமூலனுக்கும் ஸ்ரீரங்கநாயகிக்கும் மங்களம்
உருகும்மீனாட்சிபிரியாற்கும் மதுராபுரிவூரார்க்கும் மங்களம்
சீரானபூமாவத்தை ஊராற்கும்பேராற்கும் மங்களம்
இன்பமாய்இதைப்படிப்போற்கும் இகழாமல்புகழ்வோற்கும் மங்களம்

வா ழ் த் து.

மதுரைமீனாட்சியேயுன்னைப் போற்றினோம்
எங்கெங்குமுந்தன்புக ழேற்றிப்பேசவேதிகள்
மாரிமுத்தாசாரின்மொழி வாழ்கவே மது
எத்திசையிலுந்தன்கீர்த்தி இயம்பிடப்போமோநீதி
இதிகாசபுராணவொலி வாழ்கவே மது

பாண்டியர்பாலகி பரமசிவநாயகி
சந்திரசூரியர்போல வாழ்கவே மது
வேண்டினேன்மாரிமுத்து விதவிதமாகஉன்னை
மீனாட்சியின்மொழிவாழ்கவே மதுரை
உத்தமற்குஉற்றவண்டி ஊரார்க்குப்பெற்றவண்டி
சத்தியத்தைக்காத்தவண்டி விஸ்வகுலமாரிமுத்தனடி
அருமைநடையுள்ளவண்டி மீனாட்சியருள்பெற்றவண்டி
அ. மாரிமுத்தாசாரிபோற்றும் அம்மைமீனாட்சியடி
எல்லோரும் பாருங்களே பாருங்களே

மீனாட்சியம்மன்பேரில் கும்மி

காப்பு.

செந்நெல்வயல்சூழும் திருமதுரைநகர்
தென்பாரிசத்தில்நன்னயமாய்
மீனாட்சியம்மன்பேரில்யான் நவில்வதற்கு
காத்தருள்வாய் கணபதியே.

கும்மியடிபெண்கள் கும்மியடி
குருபாதங்காணவே கும்மியடி
நம்மையாளும்மீனாட்சிபாதத்தை
நாடிக்கும்மியடியுங்கடி
அவளைத்தேடிக் கும்மியடியுங்கடி 1

பாடும்புலவர்தமிழ்தோற்களவற்
பாதாரவிந்தம் சிரசில்வைத்து
நாடெங்கும்பேர்கொண்ட மீனாட்சிபாதத்தை
நாடிக்கும்மியடியுங்கடி 2

வாசம்புகழ்திருப் பூசலாவில்வளர்கின்ற
மங்கயர்கூடிமனமகிழ்ந்து
நேசம்புகழுமீ னாட்சிபாதத்தை
தேடிக்கும்மியடியுங்கடி 3

விக்னைதவராமலே காத்தருள்செல்ல வானோர்புகழும்
மதுரையில்குடிகொண்ட நாயகியே
தேனொழுகிப்பெய்யும் வயல்சூழும்படி
சிம்மாசனத்திலமர்ந்தவளே 4

மங்களமாகிய ஆயிரத்திஎண்ணூற்றி தொண்ணூற்றி
ஏழாமாண்டு, ஆனதோர்தையி மாதந்தன்னில்
தஞ்சமென்றுன்னை யடைந்தபின்பஞ்சாய்
பறக்காதேயடிமுத்துமீனாட்சி 5

பதினெண்காம்தேதி சனிக்கிழமையிலந்த
நாளையிலேஜென்ம வேளையிலே
அன்பன்மாரிமுத் தாசாரிக்கன்புடனே
இன்பத்தாடனே மதுரையிலிருந்து
இறங்கிவந்ததைப் பாருங்கடி 6

பூசலாவூருக்கதிபதியா மந்த
புண்ணியராமாரி முத்தாசாரி
அன்புடனேயவள் அம்மைமீனாட்சிபாதத்தை
அனுதினமுமவர் போற்றுவதைப்பாருங்கடி
அவரைத்தேடிக்கும்மியடியுங்கடி 7

விஸ்வகுலத்திலுதித்தவரு மவர்
வேதியர்நாட்டமும் பெற்றவரும்
அவர்பாதாரவிந்தத்தை நாடுங்கடி
திருவேதாம்தக்கெதியை தேடுங்கடி
கோரும்வரங்களைக் கொடுப்பாரடி
அவரைக்கோதிக்கும்மியடியுங்கடி 8

முருக்குமீசையும்பொட்டழகன் வயிர
முத்துக்கொருத்தாப்போல் பல்லழகன்
கன்னிகளுக்கேற்ற மாரிமுத்தைப்போல்
கண்டதில்லையென்று கும்மியடி
அவரைத்தேடிக்கும்மியடி 9

சிவப்புக்கேற்றதோர் பச்சைபட்டும்நல்ல
தேமலுக்கேற்றதோர் வடிப்பாசியும்
வகுப்புக்கொண்டையும் காதிக்கடுக்கனும்
கையில்கணையாழியும்போட்டு
வர்ணித்துகும்மியடியுங்கடி 10

வெத்திலைபாக்கும் பழம்தேங்காய்நமக்
கெத்தினைகேட்டாலும் தான்தருவார்
அம்மைமீனாட்சியருள்பெற்றுநித்தியம்
வாழ்வாரென்று ஆனந்தக்கும்மியடியுங்கடி
அவரைத்தேடிக்கும்மியடியுங்கடி 11

மாதமும்மாரிபொழிந்திடவே இந்த
மானிலமெல்லாம் செழித்திடவே
பூசலாவிலுமோற்புகழ்ந்திடவே தமிழ்
கற்றவர்கேட்டவர்மகிழ்ந்திடவே
தீர்ந்துபேசியசிறுபாலகன்
சிற்றறிவுகொண்டு கும்மிசொல்ல 12

வாருங்கடிகழிகூருங்கடி நம்மை
யாளும்மாரிமுத்தனை நாடுங்கடி
தேசமபுகழ்ந்திடும் சென்னெல்மீனாட்சியை
பாருங்கடியவளைத்தேடிக்கும்மியடியுங்கடி 13.

வாடாதமல்லிகை முல்லைவனமெதிர்
அற்புதமாய்வந்தகற்பரியே
சொல்லும்பிறைகளிருந்தாலும் பயன்
சுத்தமாய்த்திக்கியருள்புரிவாய்
நாடெங்கும்பேர்கொண்ட மீனாட்சிபாதத்தை
நாடிக்கும்மியடியுங்கடி 14

மங்களவாக்கியம்சொல்லியடி பெண்ணே
மீனாட்சிசன்னதிமுன்பாக
அன்பாகயாவரும்நீங்காமலேநின்று
தானடிக்கும்மியடியுங்கடி
அவளைத்தேடிக்கும்மியடியுங்கடி 15

கோரும்வரங்களைக் கொடுக்கும்சத்திநல்ல
கொம்பனையாள்மதுரைமீனாட்சி
அவள்சன்னதிமுன்பாக நின்றுகொண்டே அவளைச்
சார்ந்துகும்மியடியுங்கடி 16

ஆயிரம்பெண்கள்ஆடிவர அந்த
அழகர்வாகனமீதில்வர
தருதலம்புகழ்பிரதானிமாருடன்
தண்டிகைவர்தலைப்பாருங்கடி
அவரைத்தேடிக்கும்மியடியுங்கடி. 17

ஆயிரம்பொன்சப்பரத்தில் எங்க
ளழகர்வாரதைப்பாருங்கடி
குறவரெல்லாம்கூடிக் கொண்டுஅங்கே
கூச்சலிடுவதைப்பாருங்கடி 18

சித்திரமாதப்பவுரணையில் எங்கள்
தேவியாள்மதுரை மீனாட்சி
உத்தமியாள்திருவிழாவைநான்
உண்மையாய்ச்சொல்லுகிறேன் கேளுங்கடி. 19

செப்புக்கடைந்ததிருத்தேரும் நல்ல
திவ்யமானதோர் ஆபரணம்
சோதிநட்சத்திரம்போலவேயொரு
சுட்டிப்பதக்கத்தைப்பாருங்கடி 20

கையில்பிடித்தசிவமாலையும் நல்ல
கண்டத்திற்பூண்டதோர் ருத்ராட்சமும்
தண்டதளத்துடனேககாலத்திலே
சதுராய்வாரதைப்பாருங்கடி 21

பாரெல்லாம்விலைபெற்ற பாதவிரல்மோதிரம்
பாடகந்தண்டைகொலுசுடனே
தசதருவச்செசரிபின்னல்கோலாட்டமும்
சட்டமாய்வாரதைப்பாருங்கடி 22

பதிக்கிடைமீதில் பட்டாடையும்நல்ல
பசும்பொன்னினாலே ஒட்டியாணமும்
அந்தமுடனேகண்ணாடிப் படங்கள்
அமைந்தவேடிக்கை பாருங்கடி 23

வையகந்துதிபெற்ற கையில்கடகமும்
வச்சிரமணித்தாலியழகும்
அந்தமுடன்சபாமண்டபம்போலவே
அமைந்துவாரதைப்பாருங்கடி 24

ஒரொழுங்காதினில்கம்மலும் நல்ல
சித்திரப்பார்வையு மதற்கேற்ற
புள்ளிப்புறவிமீதேறிமீனாட்சிப்
புகழாய்வாரதைப்பாருங்கடி 25

பச்சைவைடூரியம் இச்சையாய்இழைத்திட்ட
பாதச்சிலம்பினொளிவுமந்த
சுற்றிலும்சேவகப்பாருக்காரர்கள்
மிகுந்துவாரதைப்பாருங்கடி. 26

ஜெகமெல்லாம்விலைபெற்ற முகமெல்லாம்மொழிவுற்ற
சிறுகாதின்கொப்பிதன்னழகும்
அந்தமதாகவே மதுரையில்வாழ்ந்திடும்
அம்மைமீனாட்சிவாரதைப்பாருங்கடி. 27

சாந்துப்பொட்டு தளதளெனநல்ல
சந்தணவாடைகுழுகுமென
சங்கீதவாத்தியமுழக்கத்துடன்
சதுருய்வாரதைப் பாருங்கடி 28

ஆதிசேடனும் கட்டுறையாப்பாணம்
அந்தரபாணம்புருசுகளும்
ஆடகபாடகவேடிக்கை சோடிக்கையுடன்
அழகாய்வாரதைப்பாருங்கடி 29

கோடிதவங்கள்செய்தாலும் மிந்தக்
கொம்பனையைக்காணமுடியாது
பத்தியுடநம்மீனாட்சியைப்பணிந்து
கும்மியடிப்போம் வாருங்கடி
அவள்பாதத்தைநாடிக்கும்மியடி. 30

காணிக்கைகொண்டு வாருங்கடிநம்ப
கன்னியைச்சேவிக்கப் பாருங்கடி
குஞ்சிதபாதத்தைக் கண்டேனடி
கூர்ந்துகும்மியடியுங்கடி
அவளைத்தேடிக்கும்மியடியுங்கடி 31

வெட்டவெளியிற் றிறைதிறந்து வேதியர்
யாவற்கும்தீபமும் காட்டிவர

அன்னமும்பாலும் தயிருடனே அபி
ஷேகம்செய்வதைப்பாருங்கடி. 32

ஆகாசத்திருமுகம் கண்டேனடி இங்கே
யாருமறியாமல் நின்றேனடி
ஏகாந்தமாகயிருந்தேனடி மன
வேகந்துலைந்தது பாருங்களேன் 33

தெப்பக்குளங்காணவாருங்கோடி புண்ய
தீர்த்தமகத்துவம் பாருங்கடி
உன்னைவேண்டிவந்தோம் கலிதீருமென்று
விரைந்துகும்மியடியுங்கடி. 34

பூமிபுகழ்ந்திடும்மதுரைப்பதியிது
பூலோகக்கயிலாசமாமே
இதுபொன்த்தாமரையில் வளர்கின்றபுண்ணிய
லட்சுமிதாயார்சன்னதி பாருங்கடி
அவளைத்தேடிக்கும்மியடியுங்கடி. 35

மதுரைவீரன் அமைத்ததைப்பாருங்கடி அந்தச்
சன்னதிக்கேகைகொட்டுங்கடி
மண்டலம்புகழும்மழகற்வாசலில்
வாழிபாடுவோம்வாருங்கடி 36

விதிஎழுத்தைக்கிழித்தாச்சுமுன்
விட்டகுறைவந்து கொட்டாச்சு
மதியமுர்தமுண்டாச்சுதென்று
மதித்துகும்மியடியுங்கடி 37

சிலமுடங்கிதை யாவரும்படிக்கவே
சிறந்தமீனாட்சிகும்மிதனை
பாலன்மாரிமுத்தாசாரிபாடினா
னென்றேகும்மியடியுங்கடி 38

குணாகுணங்கள் தானறிந்துஇந்த
மீனாட்சிமேல்க்கும்மிப்பாடல்சொன்னேன்
ஆட்சேபனைநீங்கள் சொல்லாமலிதை
அன்பாய்க்கும்மியடியுங்கடி 39

இந்தக்கும்மியைப்படிப்போர்மிக
இலங்கஅச்சிற்பதிந்தோர்க்கும்
முத்துமீனாட்சிமகத்துவம்கிடைக்குமென்றே
முழுதுக்கும்மியடியுங்கடி 40

மானிடராய்ப்பிறந்துமென்னசுத்த
மாடுபோல்திருவளர்ந்துமென்ன
அவரிடத்தில்சாம்பசிவதெரிசனங்கண்டாப்போல்
சந்தடிஎன்சொல்வேனேசர்களே. 41

அன்புடனென்கவி பார்த்தவர்கள் இதை
ஆராய்ந்துபின்பிழை தீர்த்தவர்கள்
தொந்தமாய்என்னாளும் வாழியவே
தொல்புவிஎல்லோரும் வாழியதே 42

பூமாவத்தைநேசர்களும்வாழியதே இதை
நுணுக்கமாய்க்கற்போரும் வாழிவாழி
நால்வேதசாஸ்திரம்வாழிவாழிஇந்த
மானிடரெல்லாம் வாழியதே 43

மதுரைமீனாட்சிகும்மிதன்னைசீர்
திருத்திப்பாடினோரும்வாழி
அச்சிலடித்தபுண்ணியரும்நல்ல
அழகுபுரசைஆள்பவரும்வாழி 44

பட்டணத்திலுள்ளமன்னவரும்நல்ல
பாண்டியன்மதுரை ஆள்பவரும்
வாழிவாழிஇந்த மீனாட்சியம்மை
வையகமெங்கும்மிகவாழி 45

துன்பமுற்றேஇணை இல்லாப்புகழ்பெற்ற
சுந்தரமீனாட்சிஅம்மன்கும்மி
இன்பமுடன்இப்புவியோர்படித்திட
எழுதிமுடித்தார்மாரிமுத்தாசாரி 46

நன்மையான்முத்துமீனாட்சிகும்மியை
சந்தோஷமாகமனமகிழ்ந்து
நன்மையுடனிதைஅச்சிலிட்டார்கள்
நலம்பெற்றுவாழவும் வாழியதே 47

வாடக்குபாட்டில்நடங்குசெய்திகொஞ்சம்
வந்தமட்டும்மிதைச்செப்பிவிட்டேன்
விற்பனைவாணர்களுந்தம்வாழிபுவி
வேதியர்யாவருமேவாழி. 88

முற்றுப்பெற்றது.

சா ற் று க் க வி.

நாட்டிற்புகழ்பெற்ற திருமகள்வாழும் பூமாவத்தை
நாட்டில்மேவும் மீனாட்சிமேல்க்கும்மிபாடிக் கனதையுற்ற
பாட்டிற்சிறந்த மெய்ப்பாவலனான மாரிமுத்தாசாரியின்மேல்ச்
செட்டிச்சண்முகம் செட்டியார் சொல்லியதே.

எத்திசையும்புகழ்பெற்ற பூமாவத்தைநாட்டி லிருந்துமேதான்
முத்திபெற்றசிறுமாரி முத்தினுட சரிதைதனைக்கும்மியாக
சத்திசிவனருள்பாலன் சமர்த்தன்திவ்ய புத்திமிகும்பூசலாமாரிமுத்தா
சாரி, செந்தமிழாலமுர்தமென புகன்றான்மாதோ

வி ள ம் ப ர ம்.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பதியாதெனில், இப்புத்தகம் வேண்டுபவர்கள் சிலோன் பூசலா தட்டாரத்தெருவு புக்ஷாப். 39.—37.—வது, நெம்பர். வீட்டில். அ. மாரிமுத்தாசாரியார் வசம் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு.

அ. மாரிமுத்தாசாரியார்.
